
புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | பிப்ரவரி 08, 2018 | புரட்சி 17 | முழக்கம் 04 | விலை: ரூ.3.00

## கொளத்தூரில் மாட்டுக்கறி விருந்துடன்

# கழகம் நடத்திய ‘இந்துமதப் பெருமைகள்’ ஆய்வரங்கம்!



கொளத்தூரில் காவல்துறை, ஆண்டாள் ஆய்வரங்கத்துக்கு தடைபோட்டது; உடனே ‘ஆண்டாள் அருள்வாக்கு மகிமை’ என்ற தலைப்பில் கழகம், ஆய்வரங்கை பெயர் மாற்றி நடத்தி முடித்தது. இது குறித்த செய்தி விவரம்:

03.02.2018 அன்று கொளத்தூர் பேருந்து நிலையம் எதிரில் உள்ள லட்சுமி திருமண மண்டபத்தில் நடைபெறவிருந்த “ஆண்டாள் ஆய்வுக்குரியவளே” எனும் கருத்தரங்கிற்கு காவல்துறை தடை விதித்தது. மறுப்பு அறிவிப்பினை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் சேலம் மாவட்ட அமைப்பளர் நங்கவள்ளி கிருஷ்ணன், கொளத்தூர் ஒன்றிய செயலாளர் காவலாண்டியூர் ஈஸ்வரன் ஆகியோர் வீட்டுக் கதவுகளில் வருவாய்த்துறை அலுவர்கள் முன்னிலையில் 31.01.2018 அன்று ஒட்டினர்.

இதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி வேண்டுகோள் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் கூறியிருந்ததாவது:

இது ஒரு நீண்ட வேண்டுகோள், சற்று பொறுமையுடன் முழுமையாக படியுங்கள் !

வரும் 03.02.2018, சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சேலம் மாவட்டம், கொளத்தூர் பெரியார் படிப்பகம் அல்லது லட்சுமி திருமண மண்டபத்தில் ‘ஆண்டாள் ஆய்வுக்குரியவளே’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்த திட்டமிட்டிருந்த கருத்தரங்கை நடத்தினால் மாநிலம் முழுவதும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படலாம் என்று “கற்பனைத் திறன்” மிகுந்த கொளத்தூர் ஆய்வாளர் முடிவுக்கு வந்துள்ளார்.

எனவே நாம் அனுமதிக்கு விண்ணப்பிக்காத அந்த நிகழ்வை நமக்கு சொந்தமான பெரியார் படிப்பகத்துக்குள் கலந்து உரையாடுவதையே, அதுவும் நுழைவுக் கட்டணம் செலுத்தியவர்கள் மட்டும் உள்ளே வந்து நிகழ்வைக் கேட்கலாம் என்று அறிவித்த உள்ளரங்கு கூட்டத்தையே நடத்த அனுமதி மறுத்துள்ளார்.

அதுமட்டுமின்றி 31.01.2018 அன்று காலை 09.01 மணிக்கு என்னை கைபேசியில் அழைத்து 3 நிமிடம் 20 விநாடிகள் பேசிய ஓமலூர் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் பாஸ்கர் (அவர்தான் மேட்டூர் துணைக் கண்காணிப்பாளர்(பொறுப்பு). ஏசு ஆய்வுக்குரியரே! அல்லா ஆய்வுக்குரியவரே! என்று நடத்தாமல் ஏன் ‘ஆண்டாள் ஆய்வுக்குரியவளே’ என்று மட்டும் கருத்தரங்கம் நடத்துகிறீர்கள் என்ற ஓர் அறிவுப்பூர்வமான கேள்வியை எழுப்பினார். நானும்,’அய்யா, ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினர் எழுப்பும் கேள்விகளை அப்படியே கேட்கிறீர்களே?’ என அவரது எஜமான விசுவாசத்தைப் பாராட்டி விட்டு ‘எனக்கு என்னமோ சோறு மட்டும் விருப்பமாக உள்ளது; ஆனால் ஏன் மலம் சாப்பிட மாட்டேன் என்கிறீர்கள் என்று கேட்கிறீர்கள்! நீங்களோ, உங்களைக் கேள்வி கேட்கச் சொன்னவர்களோ அதை விரும்பி சாப்பிடுவதற்கு எப்போதாவது தடை சொல்லி இருக்கிறேனா?’ என்று மிகவும் பணிவாகக் கூறினேன். “அந்தத் தலைப்பில் கருத்தரங்கம் நடத்தினால் 153 ‘எச்’ பிரிவில் ரிமாண்ட் செய்யச் சொல்லி இருக்கிறார்கள்” என்று குலை நடுங்க வைக்கும் ஒரு செய்தியைச் சொன்னார். (ஒலிப் பதிவு எம்மிடம் உள்ளது; தேவை எனில் வெளியிடுவோம்.) நானும் மாவட்ட கண்காணிப்பாளர் கைபேசி எண்ணைக் கேட்டு வாங்கிக் கொண்டேன்.

பின்னர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரையும், அவரது உதவியாளராக உள்ள தனிப் பிரிவு ஆய்வாளரையும், கைபேசியில் அழைத்துப் பார்த்தேன். அழைப்பை எடுக்கவில்லை. சரி,ஏதோ முக்கியப் பணியில் இருப்பார்கள் என மனதை சமாதானப்படுத்திக் கொண்டேன்.

ஜனநாயக நாட்டில் அரங்கத்திற்குள்ளும், எங்கள் படிப்பகத்திற்குள்ளும் கூட பேச கருத்துரிமை இல்லையா? என்பதையும் - 29.01.2018 அன்று சேலம் மாவட்ட தமிழ்நாடு ‘பிராமண சங்கம்’ மற்றும் இந்து முன்னணி செயலாளர் கடிதங்களையும் குறிப்பிட்டு அனுமதி மறுத்திருக்கிறீர்களே, எங்கள் கருத்தை மட்டும் ஏன் கேட்கத் தோன்றவில்லை என்பதையும் பேருந்து, சந்தை, திருவிழா ஆகியவற்றில் திருட்டு, ஜேப்படி, சச்சரவுகள் நடைபெறலாம் என்று சந்தேகம் வந்தால் பேருந்துகளையும், சந்தை, திருவிழாக்களையும் தடை செய்வீர்களா? அல்லது திருடர்களை, சச்சரவில் ஈடுபடுபவர்களைப் பிடிக்க முயற்சி செய்வீர்களா? - என்பவற்றுக்கு அவர்களது அறிவார்ந்த, பொறுப்புணர்வு மிக்க பதில்களைப் பெற விரும்பிய எனது ஆசையில் மண்விழுந்து விட்டதே என்ற கவலையோடு என் முயற்சி களையும் கைவிட்டு விட்டேன்.

அப்புறம்தான், அய்யய்யோ, சட்டத்தைப் பேணுகிற காவல்துறையிடம் எதிர் கேள்வி கேட்டால் என்னிடமே சட்டம் பேசுகிறாயா? எனக் கேட்டு அடியும், பொய் வழக்குகள் புனைவதும் நடக்குமே என்கிற புரிதல் நம்மை கொஞ்சம் ‘அச்சுறுத்தியது!’

காவல்துறையிடம் வழக்குப் பதிவு செய்யும் அதிகாரம் இருக்கிறதே? குண்டாந்தடிகள் இருக்கின்றனவே? ஆயுத பூஜையில் வைத்து சந்தனம் குங்குமம் வைத்த துப்பாக்கிகள் இருக்கின்றனவே? என்பவை எல்லாம் வேறு நினைவுக்கு வந்து தொலைத்தன!

சரி, சரி, நடந்தவை நடந்தவைகளாக இருக்கட்டும்! நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் ! என்ற புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்துவிட்டேன். ஆகவே காவல்துறையில் ஆணையை மதிக்கும் ஒரு பொறுப்புள்ள குடிமகனாக கீழ்கண்ட முடிவுக்கு வந்துவிட்டேன்.

இம்முடிவுகளுக்காக என்னை ’கோழை’ என்றோ, ‘பயந்தாங்கொள்ளி’ என்றோ தயவு செய்து குற்றம் சாட்ட வேண்டாம் என மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அறிவிப்புகள் !

1) ‘ஆண்டாள் ஆய்வுக்குரியவளே’ எனும் கருத்தரங்கம் இரத்து செய்யப்படுகிறது.

(4ஆம் பக்கம்)

## கொளத்தூர் நோக்கி ‘புனித’ யாத்திரை புறப்பாடு



## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் பேச்சு

# தமிழை அவமதிப்பதே வேத மரபு

‘ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள்’ என்ற தலைப்பில் ஜன.30, 2018 அன்று சென்னை இராயப்பேட்டை ஆனந்த் அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையிலிருந்து...

இன்று காந்தி பார்ப்பனர்களால் படுகொலை செய்யப்பட்ட நாள். எனவே காந்தியாருக்கும் வேத மரபான பார்ப்பனியத்திற்கும் இடையிலான ‘உறவுகள்’ குறித்து சில கருத்துகளைப் பதிவு செய்துவிட்டு, பிறகு, எனது தலைப்புக்கு வருகிறேன்.

தமிழ்நாட்டில் காந்தி மேற்கொண்ட பயணங்களின் செய்திகளைத் தொகுத்து தமிழ்நாடு காதி வாரியம், ‘தமிழ்நாட்டில் காந்தி’ என்ற நூலை வெளியிட்டிருக்கிறது. தொகுத்தவர் பெயர் இராமசாமி. அதில் உள்ள தகவல்கள் இவை:

16.10.1927 அன்று பாலக்காட்டில் காஞ்சி மூத்த சங்கராச்சாரி சந்திரசேகரேந்திரசாமி காந்தியாரை சந்தித்தார். சந்தித்த இடம் மாட்டுக் கொட்டகை. காரணம், காந்தி பிறப்பால் ‘பிராமணன்’ அல்ல என்பதுதான். அப்போது தீண்டப்படாதவர்களாக புறக்கணிக்கப்பட்ட மக்களை கோயிலுக்குள் அனுமதிக்க வேண்டும் என்ற ‘ஆலயப் பிரவேசப்’ போராட்டங்களை காந்தி நடத்திய காலம். அதுகுறித்து காந்தியிடம் பேசிய மூத்த சங்கராச்சாரி, ‘தீண்டப்படாத’வர்கள் என்று இழிவுக்குள்ளான சமூகத்தைக் கோயிலுக்குள் அழைத்துச் செல்வது கூடாது’ என்று கூறினார்.

> “அரிஜன ஆலயப் பிரவேச விஷயத்தில் சாஸ்திரங்களையும் பழைய பழக்க வழக்கங்களையும் நம்பி இருப்பவர்கள் நம் நாட்டில் பெரும்பாலோர் இருக்கிறார்கள். அவர்கள் மனம் நோகும்படிச் செய்யும் எந்த மாறுதலும் இம்சைக்கு ஒப்பாகும் என்றே தாம் முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது என்று ஸ்வாமிகள் காந்தியடிகளிடம் தெரிவித்தார்.” (நூல்: பக்.575, 576)

இந்துக்கள் மனம் புண்படுகிறது என்ற கூப்பாடு இப்போதும் கேட்கிறது. தலித் மக்களை கோயிலுக்குள் அனுமதிப்பதே ‘பெரும்பாலோர் மனம் நோகச்’ செய்யும் செயல் என்று கூறியவர்கள் தான் இந்தப் பார்ப்பனர்கள். ‘தீண்டாமை சட்டப்படிக் குற்றம்’ என்ற சட்டப் பிரிவே சங்கராச்சாரிகள் பார்வையில் ‘இந்துக்களை’ இம்சைக்குள்ளாக்கும் மனம் நோகச் செய்யும் சட்டம்தான்.

மற்றொரு சம்பவம் - காந்தியாரே மனம் திறந்து கூறிய ஒரு நிகழ்வு. அதே நூலில் இதுவும் இடம் பெற்றிருக்கிறது. அந்தக் காலத்தில் காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள்தான். மயிலாப்பூரில் சீனிவாச அய்யங்கார் என்ற பார்ப்பனர் வீட்டில்தான் காந்தி வந்தால் தங்குவது வழக்கம். பார்ப்பனர் குறித்து காந்தி கூறுகையில், “தமிழ்நாட்டில் பிராமணர்கள் இப்போது எவ்வளவோ மாறியிருக்கிறார்கள். முன்பெல்லாம் சீனிவாச அய்யங்கார் வீட்டுக்கு நான் வரும்போது அவர் வீட்டுத் திண்ணையில் தான் தங்கினேன். இப்போது அவர் வீட்டுக்குள் சமையலறை வரை நான் செல்லுகிறேன்” என்று காந்தி கூறியதாக அந்நூலில் பதிவாகியுள்ளது. அது பெரியாரின் சுயமரியாதை இயக்கம் என்ற சூறாவளி வீசிய காலகட்டம். சீனிவாச அய்யங்கார் வீட்டுத் திண்ணையிலே மட்டும் அனுமதிக்கப்பட்ட காந்தியை அவர் வீட்டு சமையலறை வரை அனுமதிக்கும் வாய்ப்பை காந்திக்கே உருவாக்கித் தந்தது பெரியார் இயக்கம்.

காந்தியின் மற்றொரு ‘வேதமரபு’ தொடர்பான நிகழ்வைப் பதிவு செய்ய விரும்புகிறேன். “ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் என்ற விவசாயி, ‘சுதந்திரம்’ பெற்றபோது தமிழ்நாட்டில் முதலமைச்சசராக இருந்தார். ‘பகவான் ரமணரிஷி’ பக்தராகவும் இராமலிங்க அடிகளாரின் சீடராகவும் இருந்தார். முன்னேறிய சமூகத்தில் பிறந்தாலும் பார்ப்பனர் ஆதிக்கத்துக்கு எதிராக சமூக நீதியோடு செயல்பட்ட நேர்மையான முதல்வர். சென்னை உயர்நீதிமன்றத்தில் முதன்முதலாக என்.சோமசுந்தரம் என்ற பார்ப்பனரல்லாதாரை நீதிபதியாகப் பரிந்துரைத்தார். பார்ப்பனர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். முதன்முதலாகப் ‘பிற்படுத்தப்பட்டோர்’ என்ற பிரிவினருக்கு இடஒதுக்கீடு முறையை அமுல்படுத்தியவர். அதற்கு முன்பு வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை இருந்தது. பதைபதைத்துப் போன பார்ப்பனர்கள் தமிழ்நாட்டுக்கு காந்தி வந்தபோது, ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாருக்கு எதிராக ஒரு புகார் மனுவை காந்தியிடம் அளித்தனர். ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், தாடியில்லாத இராமசாமி நாயக்கர் என்றும், அவர் பதவிக்கு வந்த பிறகு, ‘பிராமணர்’களுக்கு பணியிடங்களில், கல்லூரிகளில் இடம் கிடைப்பது இல்லை என்றும் மனுவில் புலம்பினார்கள். மனுவைப் படித்த காந்தி, பார்ப்பனர்களைப் பார்த்து திருப்பிக் கேட்டார். “பிராமணருக்குரிய தர்மம் வேதங்களைப் படிப்பதும், ஓதுவதும் தானே; ‘என்ஜினியரிங்’ படிப்பது ‘பிராமண தர்மத்துக்கு’ எதிரானது அல்லவா? என்று காந்தி திருப்பிக் கேட்டார். அதிர்ச்சியடைந்த பார்ப்பனர்கள், இனி காந்தி தங்களுக்குப் பயன்பட மாட்டார் என்ற முடிவுக்கு வந்தனர். அடுத்த ஆண்டிலேயே காந்தி சுட்டுக் கொல்லப்பட்டார்.



இப்போது நமது தலைப்புக்கு வருவோம். தமிழையோ பார்ப்பனரல்லாத தமிழர்களையோ ‘வேதமதம்’ சமத்துவமாக எப்போதும் அங்கீகரித்ததே இல்லை. இப்போது ‘இந்து’ என்று இவர்கள் பேசுகிற மதம், ‘வேத மதம்’, ‘பார்ப்பனிய மதம்’ தான். ‘இந்து’ என்ற சொல், எந்த இதிகாசம், புராணம், வேதத்திலும் இல்லை. பிரிட்டிஷ் ஆட்சியில் உருவாக்கப்பட்ட பெயர். இதை காஞ்சி சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதியே ஒப்புக் கொள்கிறார். அவாள் பார்வையில் ‘சமஸ்கிருதம்’ தான் தமிழுக்கே தாய் மொழி. இங்கே தமிழ்நாட்டில் இந்து மதக் காவலர்களாகப் புறப்பட்டிருக்கும் விவரம் புரியாத அப்பாவி ‘சூத்திரர்கள்’ தமிழ்நாடு - பெரியார் பூமியல்ல; ‘ஆழ்வார், நாயன்மார்கள் பூமி’ என்று பேசுகிறார்கள். தொலைக்காட்சியில் பேசும் சில பார்ப்பனர்களும் இப்படிப் பேசுவது வழக்கமாகியிருக்கிறது. ஏதோ ஆழ்வார், நாயன்மார் தமிழில் பாடிய பக்திப் பாடல்களை எல்லாம் பெருமைப்படுத்துவதுபோல தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். இது ஆழ்வார், நாயன்மார் பூமி என்றால்,தமிழ்நாட்டுக் கோயில்களிலே ஏன் சமஸ்கிருத வழிபாடு நடக்க வேண்டும்? தமிழ்நாட்டில் தமிழர் வீட்டு ‘முகூர்த்தங்களில்’ ‘திதி’களில் ‘கிரகப் பிரவேசங்களில்’ ஏன் தமிழைப் புறக்கணித்து சமஸ்கிருதத்திலே மட்டும் மந்திரங்களை புரியாத மொழியில் ஓதவதுதான் ‘இந்து’க்களின் கடமை என்று வற்புறுத்த வேண்டும்? ஆழ்வார் நாயன்மார்கள் பாடிய தமிழ்ப் பாட்டுகள் ‘தீட்டாகி’ விட்டது ஏன்? தில்லை நடராசன் கோயில் தீட்சதர்கள், தேவாரம் பாடிய ஓதுவாரை விரட்டி அடித்தது ஏன்?

காஞ்சி பெரிய சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதி இதற்கு தெளிவாகவே பதில் கூறிவிட்டார்:

> “இந்து மதத்தினுடைய சமஸ்காரங்கள் என்று சொல்லக்கூடிய தத்துவார்த்தங்களை சடங்குகளை எல்லாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அது சமஸ்கிருதத்திலேதான் முடியுமே தவிர வேறு ஆங்கிலம், தெலுங்கு, தமிழ் போன்ற எந்த மொழிகளாலும் புரிந்து கொள்ள முடியாது.”

ஆழ்வார்கள், நாயன்மார்கள் பூமியிலே அவர்கள் எழுதிய தமிழில் இந்து மதத்தைப் புரிந்து கொள்ள முடியாது என்கிறார் சங்கராச்சாரி. பார்ப்பனர்கள் இன்று வரை சமஸ்கிருதத்தையே உயர்த்திப் பிடித்துக் கொண்டு ‘இது ஆழ்வார் பூமி, நாயன்மார் பூமி’ என்று பிதற்றுவது, காதில் பூ சுற்றுவது அல்லவா?

வள்ளலார், காஞ்சி மூத்த சங்கராச்சாரியை சந்தித்தபோது, ‘சமஸ்கிருதமே அனைத்து மொழிகளுக்கும் தாய்’ என்று கூறியவுடன், வள்ளலார் உடனே, ‘அப்படியானால் எங்கள் தமிழ் தான் தந்தை’ என்று அவரிடமே நேரடியாக பதிலளித்தார். வள்ளலார் வரலாற்றை எழுதிய ஊரன்அடிகளார் இதைப் பதிவு செய்கிறார்.

சைவத்தில் மிகுந்த பிடிப்புள்ளவரும், தமிழ் ஆட்சி மொழி அகராதியை உருவாக்கியவருமான ஆட்சி மொழிக் காவலர் கி. இராமலிங்கனார், தன்னுடைய சரிதையான ‘என் வரலாறு’ நூலில் சங்கராச்சாரியுடன் ஏற்பட்ட அனுபவத்தைப் பதிவு செய்திருக்கிறார். உணவு வழங்கும் துறை அதிகாரியாக அவர் இருந்தபோது, காஞ்சி சங்கரமட அழைப்பை ஏற்று மடத்துக்கு உணவுப் பொருள் வழங்குதல் குறித்து சந்திக்கச் சென்றார். தமிழில் பேசிய இராமலிங்கனார் கருத்தைப் புரிந்துக் கொண்டு, சமஸ்கிருதத்திலே சங்கராச்சாரி உரையாட அவரது செயலாளர் தமிழில் மொழி பெயர்த்தார். கி. இராமலிங்கனார், ‘சங்கராச்சாரி தமிழ் பேச மாட்டாரா’ என்று கேட்டபோது, ‘உச்சிவேளை பூசை நேரத்தில் ஸ்வாமிகள், ‘நீசபாஷை’யில் பேச மாட்டார்’ என்ற பதிலை உதவியாளர் கூறினாராம்.

தமிழ், வடமொழி இரண்டிலும் புலமைப் பெற்றவர் நாவலர் சோமசுந்தர பாரதியார். தனது உறவினர் வீட்டுத் திருமணத்தில் ஒரு புரோகிதர், திருமண மந்திரங்களுக்குப் பதிலாக, ‘கருமாதி மந்திரம்’ ஓதியதைக் கண்டுபிடித்து, அந்த புரோகிதனை மந்திரத்தை நிறுத்தச் சொல்லி, கேள்விக் கேட்டவுடன் புரோகிதன், ‘திருதிரு’வென்று விழித்திருக்கிறான்.

ஆனால், ‘பார்ப்பனர்கள் மட்டுமே வேதங்களை ஓத வேண்டும்’ என்கிறார் சீனியர் சங்கராச்சாரி. வேதத்துக்குரிய அதிகாரம் படைத்தவர்கள் ‘பிராமணர்களே’ என்று வெளிப்படையாகவே கூறுகிறார். இந்த அதிகாரம் ‘அவாள்களே’ எடுத்துக் கொண்ட அதிகாரம். இன்னும் கொடுமை என்னவென்றால், தனது பார்ப்பனிய வெறியை நியாயப்படுத்த, தமிழைத் துணைக்கு அழைப்பது தான். சங்கராச்சாரியின் கருத்துகளைத் தொகுத்து, வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ள ‘தெய்வத்தின் குரல்’ தொகுதி இரண்டிலிருந்து ஒரு பகுதியைக் கூறுகிறேன்:

“தமிழில் மறை என்று ஒன்று இருந்து, அந்தப் பெயரை வேதத்துக்கு வைக்கவில்லை” என்கிறார். அதாவது தமிழில் மறை என்ற ஒன்றே இல்லை என்கிறார். தமிழர் மறையான திருக்குறளையும் அவாள்கள் ஏற்க தயாராக இல்லை. மேலும் கூறுகிறார்:

> “வேதங்களில் ஆங்காங்கே மறைமுகமாக இரட்சிக்க வேண்டிய பகுதிகளுக்கு ‘இரகசியம்’ என்று வேதத்திலே பெயர் கொடுத்திருக்கிறது. உபநிஷத்துகளில் இப்படி இரகசியமான பகுதிகளை தனியாக உபநிஷதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழ் இன்னும் ஒரு படி மேலே போய் வேதம் முழுதும் ‘மறை’ என்ற சொல்லிவிட்டது. “மறை என்றால் மறைத்துக் காப்பாற்ற வேண்டியது என அர்த்தம்” என்கிறார் சங்கராச்சாரி.

வேதத்தை ‘மறை’ என்று தமிழறிஞர்கள்

(3ஆம் பக்கம்)

### கருத்தரங்கைத் தடுக்க வந்த பா.ஜ.க.வினர்

‘தமிழை மறுக்கும் வேத மரபுகள்’ நிகழ்ச்சிக்கு கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் தலைமை தாங்கினார். மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் பொறுப்பாளர் வாலாஜா வல்லவன், பேராசிரியர் சுந்தரவள்ளி, விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினர். மயிலைப் பகுதி கழகப் பொறுப்பாளர் சுகுமார் வரவேற்புரையாற்றினார். தென்சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி தொகுத்து வழங்கினார். அரங்கம் முழுதும் கூட்டம் நிரம்பி வழிந்தது. நிகழ்ச்சிக்கு காவல்துறை அனுமதி தரக் கூடாது என்று அரங்கிற்கு வெளியே பா.ஜ.க.வினர் காவல்துறையிடம் எதிர்ப்பு தெரிவித்து நிகழ்ச்சியை தடைப்படுத்த முயன்றனர். தடைகளைத் தகர்த்து பார்ப்பனியத்தின் வேதமரபுகளையும் தமிழ் எதிர்ப்பையும் உரையாளர்கள் ஆதாரங்களோடு விளக்கினர்.

# ஜாதி மறுப்புத் திருமணத்தைத் தடுப்போருக்கு உச்சநீதிமன்றம் கடும் எச்சரிக்கை

இருவேறு சாதியைச் சேர்ந்த வயது வந்த ஆணும் பெண்ணும்விருப்பப்பட்டு செய்து கொள்ளும் காதல் திருமணங்களைத் தடுக்க யாருக்கும் அதிகாரம் இல்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.மேலும், சாதி மறுப்புத் திருமண தம்பதியரை தாக்குவது சட்டவிரோதம் என்று அறிவித்துள்ளநீதிபதிகள், இவ்விஷயத்தில் நடத்தப்படும் கட்டப்பஞ்சாயத்துகளை மத்திய அரசே முன்வந்துதடை செய்ய செய்ய வேண்டும்; இல்லையேல் நீதிமன்றம் தலையிட்டு உரிய முடிவெடுக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். ஹரியானா, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அதிகளவில் நடைபெறும் கட்டப் பஞ்சாயத்துகளை குறிப்பிட்டு, சக்தி வாஹினி என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் கடந்த 2010இல் உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தது.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், மத்திய அரசின் கருத் தைக் கேட்டிருந்தது. அதற்கு, “கிராமங்களில் நடக்கும் கட்டப் பஞ்சாயத்துகளின் வன்முறைகளில் இருந்து பெண்களைக் காக்க - கண்காணிக்க உச்சநீதிமன்றமே ஏதாவது வழிமுறையை சொல்ல வேண்டும்” என்று மத்திய அரசு கூறிவிட்டது. இவ்வழக்கு தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, நீதிபதிகள் ஏ.எம். கன்வில்கர், டி.ஒய். சந்திரசூட் அமர்வு முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது,

“ஒரு ஆணும், ஒரு பெண்ணும் அவரவரின் விருப்பப்படி திருமணம் செய்து கொள்ளலாம்; அவர்களை கட்டப் பஞ்சாயத்து, சாதி அமைப்பு பஞ்சாயத்து, ஊர் பஞ்சாயத்து என்றபெயரில் தாக்குவது சட்ட விரோதமானது” என்று கண்டித்த நீதிபதிகள்,

“திருமண வயது வந்த ஆணும் பெண்ணும் காதல் திருமணம் செய்வதைத் தடுப்பது சட்ட விரோதம்; சாதி மறந்து காதல் திருமணம் செய்வதைத் தடுக்கும் அதிகாரம் பெற்றோர், சாதி அமைப்பு, கட்டப்பஞ்சாயத்து, ஊர் பஞ்சாயத்து, சமூகம் என யாருக்கும் கிடையாது” என்று தெரிவித்தனர்.

மேலும், “சாதி மாறி திருமணம் செய்து கொள்ளும் இளம் தம்பதிகள் ஆணவப் படுகொலை செய்யப்படுவதை தடுக்க, ஏற்கெனவே உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆலோசகர் ராஜூ ராமச்சந்திரன் அளித்த பரிந்துரைகள் மீது மத்திய அரசு தனது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும்”என்று உத்தரவிட்ட நீதிபதிகள்,

“இரு வேறு சாதியினருக்கு இடையே நடக்கும் திருமணத்துக்கு எதிராக நடக்கும் கட்டப்பஞ்சாயத்துக்களை மத்திய அரசு தடுக்க வில்லை என்றால் நீதிமன்றம் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்” என்றும் எச்சரித்தனர்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டது, ‘நெறி’ என்ற பொருளில்தானே தவிர, அதை இரகசியமாக மறைத்து வைக்க வேண்டும் என்ற பொருளில் அல்ல. ஆனால் தமிழே, வேதத்தை முழுமையாக மறைக்க வேண்டும் என்று கூறிவிட்டது. வேதம்கூட அப்படி கூறவில்லை; தமிழே கூறுகிறது என்று திரிபுவாதம் செய்கிறார். தமிழை ‘நீச பாஷை’ என்று கூறுகிற இவர்கள், தங்கள் வேதத்தைக் காப்பாற்றுவதற்காக தமிழை கேடயமாக்குகிறார்கள். இதுதான் பார்ப்பனியமான வேத மரபின் நேர்மையற்ற பித்தலாட்டம்.

இப்போது ‘தமிழ்த் தாய்’ வாழ்த்துக்கு எழுந்து நிற்க முடியாது. அது சங்கரமட மரபு அல்ல என்கிறது சங்கரமடம். விஜயேந்திரன், தமிழ்த் தாய் வாழ்த்து பாடும்போது ‘தியானத்தில்’ இருந்தாராம். ஆனால், ‘தேசிய கீதம்’ பாடும்போது, தியானம் போய் நிதானம் வந்து விடுகிறது. தேசிய கீதத்துக்கு எழுந்து நிற்காவிட்டால் அது சட்டப்படி தேசிய அவமதிப்புக் குற்றம். தமிழ்த் தாய் வாழ்த்துக்கு அப்படி சட்டம் ஏதும் இல்லை. அது ஒரு சம்பிரதாயம்; மரியாதைக்குரிய மரபு. பெரியார் பொது நிகழ்வில் கடவுள் வாழ்த்துப் பாடினாலும், ‘தேசிய கீதம்’ பாடினாலும் அவற்றில் அவருக்கு உடன்பாடு இல்லை என்றாலும் தள்ளாத வயதிலும் எழுந்து நிற்பார். அது அவைக்குக் காட்டும் மரியாதை என்றார் பெரியார். அந்தப் பண்பை இந்தப் பார்ப்பனர்களிடம் வேத மரபாளர்களிடம் எதிர்பார்க்க முடியுமா? சொல்லப்போனால் தியானத்தை திறந்தவெளியில் செய்யக் கூடாது என்கிறார்கள். இவர் தியானத்தையும் அவமதித்திருக்கிறார்.

தமிழை, சங்கராச்சாரி எப்படி இழிவாகக் கருதினார் என்பதற்கு மற்றொரு சான்று. மிகப் பெரும் வேதபண்டிதரான அக்னிஹோத்ரம் இராமானுஜ தாத்தாச்சாரி, ‘நக்கீரன்’ பத்திரிகையிலே ஒரு தொடர் எழுதினார். “இந்து மதம் எங்கே போகிறது?” என்ற தலைப்பில் அது நூலாக வெளி வந்திருக்கிறது. இந்தத் தொடர் வேத புரோகிதத்தின் உண்மை முகங்களை கிழித்து தொங்கவிட்டிருக்கிறது. தொடர் வெளிவந்தபோது ‘துக்ளக்’ ஆசிரியரான சோ, தொடரை நிறுத்துமாறு விடுத்தவேண்டுகோளை தாத்தாச்சாரி ஏற்க மறுத்து தொடரை எழுதினார். “தனது கருத்தை தாத்தாச்சாரி அழுத்தமாகப் பதிவு செய்ததற்காக வர்ணாஸ்ரம மனுதர்மங்களை இன்னமும் கைவிட முடியாத சில ‘பெரிய’ மனிதர்கள் தாத்தாச்சாரியின் வீடு தேடிப் போய் அவரை மிரட்டினார்கள்” என்று அந்த நூலின் பதிப்புரையிலேயே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. தமிழை வேதமதம் எப்படி அவமதிக்கிறது என்பதற்கு காஞ்சி மடத்தில் நிர்வாகியாக முக்கியப் பொறுப்பில் தாத்தாச்சாரி இருந்தபோது நிகழ்ந்த சம்பவத்தையே இவ்வாறு குறிப்பிடுகிறார்:

“கும்பகோணம் மடம் (காஞ்சி மடத்துக்கு அதுதான் உண்மைப் பெயர்) சூரியன் வானத்தின் மேற்குப் பக்கமாய் மேய்ந்துக் கொண்டிருந்தான். மஞ்சள் நிற கதிர்கள் பூமியின் மீது பொலபொலவென உதிர்கின்றன. ஒருவிதமான ஊதல் காற்று கும்பகோணத்தையே குளிப்பாட்டிக் கொண்டிருந்தது.

அந்த நாளுக்கான மாலை நேர பூஜைகளுக்காக மடம் தயாராகிக் கொண்டிருந்தது. மகா பெரியவர் ஸ்நானம் முடித்திருந்தார். மதியம் சிறிது நேரம் தூங்கினால்கூட ‘மடி’ அதாவது ஆச்சாரம் போய்விடும். மறுபடியும் குளித்தாக வேண்டும். அந்த வகையில்... குளித்து முடித்துவிட்டிருந்தார் மகாபெரியவர்.

அந்த நேரமாய் பார்த்து ஒரு சில பக்தர்கள் அவரைப் பார்த்தே தீருவது, அருளாசிப் பெற்றே தீருவது என்ற முடிவில் காத்திருந்தார்கள். அவர்களில், நாட்டுக்கோட்டை செட்டி நாட்டிலிருந்து வந்திருந்த அருணாசலம் என்ற பக்தர்... மகா பெரியவரைப் பார்த்து அவரிடம் அருள்மொழிகள் வாங்கி விட்டுத்தான் போவது என்ற உறுதியோடு இருந்தார்.

அந்த நேரம் நானும் மடத்தில் இருந்ததால், அருணாசலத்திடம் சொன்னேன்... ‘இதோ பாரப்பா, இன்றைக்கு நீ மகாபெரியவரை பார்க்க முடியாது, நாளை வாயேன்’ என்றேன்.

‘இல்லை சாமி இப்பவே அவரைப் பார்க்கணும்’ – என்றார் பக்தர்.

எங்கள் பேச்சுச் சத்தத்தைக் கேட்ட சிலர்... விஷயத்தை மகாபெரியவரிடம் சொல்ல அவர் என்னை உள்ளே அழைத்தார்.

போனேன். கேட்டார். சொன்னேன். “இதோ பாரும் தாத்தாச்சாரி... அவரைப் பார்க்கறதுக்கு நேக்கு ஒண்ணுமில்லை... பார்த்தால் ஏதாவது கேப்பார், பதிலுக்கு நான் தமிழ் பேச வேண்டிவரும், நோக்குதான் தெரியுமே... தமிழ் பேசினால் எனக்கு தீட்டு. மறுபடியும் ஸ்நானம் பண்ணனும்... பூஜைக்கு நேரமாயிடுத்துல்யோ... அதனால் நான் மௌனம் அனுஷ்டிக்கிறேன்னு சொல்லி அனுப்ச்சிடுங்கோ...”

என என்னோடு சமஸ்கிருத சம்பாஷணை நிகழ்த்தினார் மகாபெரியவர்.

நானும் வெளியே வந்தேன். ‘நான் சொன்னதுதானப்பபா... சுவாமிகள் மௌனத்தில் இருக்கார். நாளைக்கு வாயேன்...’ என்றேன்.

‘அப்படியா? தெய்வத்தை இன்னிக்கே பார்க்கலாம்னு எதிர்பார்ப்போட வந்தேன். சரி... நாளை வரை ஏதும் சத்திரத்தில் தங்கிவிட்டு வர்றேன்’– என தாய்மொழியாம் ‘தமிழில்’ மகா பெரியவரை தெய்வமாக மதித்து ஆதங்கப்பட்டுக் கொண்டே சென்றார் அருணாசலம்.”

–(‘இந்து மதம் எங்கே போகிறது?’ நூலிலிருந்து)

இதுதான் வேத மரபு - தமிழுக்கு தந்த மரியாதை. ‘வேத மரபு’க்கு இப்போதும் அதிகாரம் படைத்ததாகக் கூறிக் கொண்டிருக்கும் சங்கராச்சாரி மடம், தமிழுக்குத் தருமம் கவுரவம், மரியாதை, அங்கீகாரம் இதுதான். பிறகு விஜயேந்திரன் எப்படி தமிழ்த் தாய் வாழ்த்தக்கு எழுந்து நிற்பார்? அந்த ‘நீச பாஷை’யை வாழ்த்திப் பாடுவதை காதால்கூட கேட்கக் கூடாது என்பதற்காகவே ‘தியானத்துக்கு’ப் போய் விட்டார்.

(தொடரும்)

# மீனாட்சிக் கோயிலில் ‘அக்னி’ பகவான்

மதுரை மீனாட்சிக் கோயில் மண்டபம் தீப்பிடித்து எரிந்துவிட்டது. ‘தீ விபத்து’ என்று பா.ஜ.க.வின் ‘தமிழிசை’யும், ‘தேசபக்தர்’ எச்.ராஜாவும் கூறுகிறார்கள். ராஜா இன்னும் ஒரு படி மேலேயே போய்விட்டார். ‘சி.பி.அய். விசாரணை வேண்டும்’ என்கிறார். ‘இந்துக்கள் வழிபாடு – கோயில் நிர்வாகங்களில் அரசு தலையீடு கூடாது’ என்று நீட்டி முழங்கும் ‘ஆண்டி இந்தியன்’ புகழ் ராஜாவும் இந்து முன்னணியும் இப்போது சி.பி.அய். விசாரணை கோருவது அரசின் தலையீடு அல்லவா?

‘ஆகம விதிப்படி பூஜை புனஸ்காரங்கள்’, ‘அவாள்களை’க் கொண்டே நடத்தாவிட்டால் ஆபத்து வந்து விடும் என்று அலறும் பார்ப்பனர்கள், இப்போது மீனாட்சி கோயிலில் ஆகமக் குளறுபடிகள் நடந்துவிட்டனவா என்று ஆராயாமல், சி.பி.ஐ. விசாரணையைக் கோருவது ஏன்? பார்ப்பனர்களையும், பார்ப்பனியத்தையும் காப்பாற்றும் முயற்சியல்லவா?

இவர்களுக்கு இப்படி எல்லாவற்றிலும் இரட்டை வேடம் தான்.

‘பூஜை புனஸ்காரங்கள்’ நடக்கும்போது கோயிலுக்குள் இருக்கும் சிலையை ‘பகவான்’ என்பார்கள். அதே பகவான் வெளிநாடு கடத்தப்படும்போது அல்லது கோயிலுக்குள்ளே விபத்துகள் ஏற்படும்போது, பகவானை ‘சிலைகள்’ ஆக்கி விடுவார்கள். பகுத்தறிவாளர்கள் சிலை என்று கூறினால், “இந்து விரோதி; இந்து தான் இளிச்சவாயர்களா?” என்று வீரம் பேசுவார்கள். அதே வாய்தான் இப்போது தீ விபத்தால் ‘சிலை’களுக்கு பாதிப்பு இல்லை என்று பேசுகிறது. வடிவேலு பாணியில் கேட்டால் இது ‘நாற வாயா?’

வேத பார்ப்பன அகராதியில் ஒரே சொல்லுக்கு வெவ்வேறு அர்த்தம் உண்டு.

அர்ச்சனையில் அவாள் தருவதற்குப் பெயர் ‘தீர்த்தம்’. அதே கோயிலில் தீ விபத்து நேர்ந்து, தீயணைப்புப் படை விரைந்து வந்து தீயை அணைக்கப் பீய்ச்சி அடிப்பதற்குப் பெயர் ‘தண்ணீர்’. மீனாட்சியைக் காப்பாற்ற தீயணைக்கும் படை ‘தீர்த்தம்’ அடித்தது என்றால் அவ்வளவுதான். ‘ஆன்டி இந்தியன்’ கூச்சல் காதைத் துளைக்கும்.

கோயில் வளாகத்தில் பார்ப்பனர் நெருப்பை மூட்டினால் அந்த நெருப்புக்குப் பெயர் ‘அக்னி’. அதே கோயில் மண்டபம் எரிந்தால் அது தீ விபத்து, ‘அக்னி பகவான் விஜயம்’ அல்ல.

ஆண்டவனிடம் பக்தர்களின் கோரிக்கைகளை பரிந்துரைத்து வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க அர்ச்சகருக்கு தட்டில் போடும் பணம், உண்டியலில் போடும் பணம் ‘காணிக்கை’. பாரதியார் பல்கலைக்கழகத் துணை வேந்தர் தன்னிடம் வேலை கேட்டு வந்தவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற வாங்கிய பணம் காணிக்கையல்ல; இங்கே ‘இலஞ்சம்’ என்று பெயர். துணைவேந்தர் ‘காணிக்கை’ வாங்கினார் என்று கூறினால் அவ்வளவுதான்!

அப்போது பகவான் அவதாரம் எடுக்க பூமியைப் பிளந்தால் பூமிக்குப் பெயர் பூமா தேவி. அதே பூமி, வெப்பமாகி வருவதைத் தடுக்க மாநாடுகள் நடத்தினால் அங்கே ‘பூமா தேவி’ வெப்பமடைகிறாள் என்று சொல்லக் கூடாது. ‘பூமி வெப்ப மடைகிறது’ என்றே சொல்லவேண்டும்.

பார்ப்பனத் திமிரோடு மக்களைக் கூறு போடுகிறவன் ‘இந்தியன்’. மக்களைக் கூறு போடாதே என்று மக்கள் ஒற்றுமையைப் பேசினால் ‘ஆன்டி இந்தியன்’.

மீனாட்சிக்கு சக்தி இருந்தால் தீ விபத்தைத் தடுத்திருக்க முடியாதா? என்று கேட்டால், அவன் ‘இந்து விரோதி’.

“மீனாட்சியால் தீ விபத்தை தடுக்க முடியாது என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். ‘அவாளால்’ தண்டிக்கவும் முடியாது. எனவே சி.பி.அய். விசாரணை வேண்டும் என்று கேட்டு மீனாட்சி சக்தியையே சந்தேகத்துக்குள்ளாக்குகிறவன் – உண்மையான இந்து; உண்மையான ‘இந்தியன்’.

அடேங்கப்பா, இவாள்கள் ஜகதலக் கில்லாடிகளடா, சாமி!

– **கோடங்குடி மாரிமுத்து**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## பார்ப்பனியக் கட்சி என்பதை மீண்டும் நிரூபிக்கிறது

# திராவிடக் கட்சிகளை வீழ்த்த ஈரோட்டில் பா.ஜ.க. யாகம்!

*திராவிட கட்சிகளை வீழ்த்தி, பா.ஜ.க.வின் 'இந்து சாம்ராஜ்யத்தை' தமிழகத்தில் நிறுவுவதற்கு ஈரோட்டில் பல கோடி ரூபாய் செலவில் பா.ஜ.க. தலைமை, யாகம் நடத்தியுள்ளது.*

*இது குறித்து 'ஜூனியர் விகடன்' ஏடு (7.2.18) வெளியிட்டுள்ள செய்தி:*

"இஸ்லாமியர்களை விரட்டிவிட்டு இந்து சாம்ராஜ்ஜியத்தைப் பலப்படுத்த அஸ்வமேத ராஜ சூய யாகத்தை சத்ரபதி சிவாஜி நடத்தினார். அப்படியொரு யாகத்தை ஈரோட்டில் பல கோடி ரூபாய் செலவில் நாங்கள் நடத்தியுள்ளோம். 'இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய யாகம் இது' என ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் கூறினார்" என்று பெருமையுடன் நம்மிடம் கூறினார், பி.ஜே.பி. விவசாய அணியின் தமிழகப் பொதுச் செயலாளர் கோவிந்தராஜு.

ஈரோடு மாவட்டம் திண்டல் அருகே ஏ.இ.டி. பள்ளி வளாகத்தில், பி.ஜே.பி. சார்பில் ஜனவரி **26**, **27**, **28** தேதிகளில் பிரமாண்டமான முறையில் யாகம் நடத்தப்பட்டது. இந்த யாகத்தில், குதிரையை உயிருடன் எரித்ததாகத் தமிழகத்தின் மேற்கு மாவட்டங்களில் காட்டுத் தீ போல பரவிய தகவல், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாகம் குறித்து ஏ.இ.டி. பள்ளியின் தலைமை ஆசிரியரான முருகசாமியிடம் கேட்டோம். "பி.ஜே.பி.-யின் விவசாய அணி தான், யாகத்தை நடத்தியது. இடத்தை நாங்கள் கொடுத்தோம். இராமாயண காலத்தில் இராமர் செய்த யாகத்துக்கு அடுத்ததாக, மிகப் பெரிய யாகம் ஒன்று கர்நாடகாவில் நடந்துள்ளதாம். அந்த யாகத்தையெல்லாம்விட, பல மடங்கு பெரியதாம் இந்த யாகம். இதற்காக, இரண்டரை ஏக்கரில் தகரப் பந்தல் அமைக்கப்பட்டது. யானை, குதிரை, காளை, பசு ஆகியவற்றை வைத்து யாகம் நடத்தப்பட்டது. இதற்கு, இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் செலவாகியிருக்கும். 'குண்டத்தில் குதிரையைத் தள்ளி எரித்தார்களா ?' என்று பலரும் விசாரிக் கிறார்கள். யாகம் மூன்று நாள்கள் நடந்தது. நான் அவ்வப் போது மட்டுமே அங்கு சென்று வந்தேன். கேன்டீன் நடத்து பவர்தான் மூன்று நாள்களும் அங்கேயே இருந்தார்" என்றார்.

பள்ளியில் கேன்டீன் நடத்தும் முத்துசாமியிடம் பேசினோம். "**300**க்கும் மேற்பட்ட சாஸ்திரிகள் மந்திரங்கள் சொல்லி யாகம் நடத்தினர். யாக குண்டத்துக்குள் கிலோ கணக்கில் மூலிகைகளைப் போட்டனர். கூடை கூடையாக ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை, அன்னாசிப் பழங்கள், தார் தாராக செவ்வாழை, தேன் வாழை, ரஸ்தாலி உள்பட அனைத்து வகையான வாழைப்பழங்கள்; விலையுயர்ந்த பட்டு வேட்டி, சேலைகள், மூட்டை மூட்டையாகத் தேங்காய், நெல், தானிய வகைகள், குடம் குடமாக நெய், இரண்டு டன்னுக்கு மேல் பல வகையான மரக்கட்டைகள் ஆகியவற்றைக் குண்டத்தில் போட்டு எரித்தார்கள்" என்று விரித்துக் கொண்டே வந்தவர், 'குதிரையை யாகத்தில் போடவில்லை' என்பதை மட்டும் சற்று தயக்கத்துடன் சொன்னார்.



குதிரைக்கு பூஜை

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் ஈரோடு மாவட்டச் செயலாளர் குமரகுரு பரன், "குதிரையை உயிருடன் யாக குண்டத்துக்குள் தள்ளி எரித்துள்ளனர். காளை தழுவும் விளையாட்டான ஜல்லிக் கட்டுக்குத் தடை வாங்கிய பீட்டா போன்ற அமைப்புகள் என்ன செய்கின்றன ? யானை, குதிரை, காளை, பசுக்களை நிற்க வைத்து யாகம் நடத்தியதற்கு ஆதாரமாக உள்ள புகைப் படங்களை வைத்து இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

இந்த யாகத்தை நடத்திய பி.ஜே.பி. விவசாய அணியின் பொதுச் செயலாளர் கோவிந்தராஜு, 'விவசாயம் செழிக்க காஞ்சி இளைய சங்கராச்சாரியார் விஜயேந்திரர் தலைமையில் முதல் நாளன்று லக்ஷ்மி மஹா யாகமும், மக்கள் அமைதிக்காக வேலூர் பொற்கோவில் சக்தி அம்மா தலைமையில் இரண்டாம் நாளன்று ருத்ர யாகமும், ராஜ்ஜிஜயத்தைப் பலப்படுத்த ஸ்ரீஸ்ரீரவிசங்கர் தலைமையில் மூன்றாம் நாள் அஸ்வமேத ராஜ சூய யாகமும் நடத்தத் திட்டமிட்டோம். தமிழ்த் தாய் வாழ்த்து சர்ச்சையால் விஜயேந்திரர் வரவில்லை. இந்த யாகங்களுக்கு எங்கள் தேசிய விவசாய அணித் தலைவர்களும், மத்திய அமைச்சர் பொன். ராதா கிருஷ்ணன், தமிழக அமைச்சர்கள் கருப்பணன் மற்றும் செங்கோட்டையன் உள்பட பல வி.ஐ.பி.க்களும் வந்திருந்தனர். மன்னர்கள் காலத்தில் குதிரையை நிற்க வைத்து யாகம் நடத்தி அவிழ்த்து விடுவார்கள். குதிரை எங்கெல்லாம் செல்கிறதோ, யாகம் நடத்திய மன்னனுக்கு அந்தத் தேசங்கள் சொந்தமாகும். எந்தத் தேசம் குதிரையைத் தடுத்து நிறுத்து கிறதோ, அந்த நாட்டுடன் மன்னன் போர் புரிவான். இதுதான் அஸ்வமேத ராஜ சூய யாகம். நாங்கள் குதிரையைப் பலி கொடுக்கவில்லை. யானை, குதிரை, காளை, பசுக்களை நிறுத்தி யாகம் செய்து விட்டு, அவற்றை உரியவர்களிடமே ஒப்படைத்து விட்டோம். யாக நிகழ்வுகள் முழுவதையும் வீடியோ எடுத்துள்ளோம். அதைக் காட்டத் தயார்" என்றார்.

ஈரோட்டில் உள்ள பி.ஜே.பி.யினர் சிலரிடம் பேசினோம். "தமிழகத்தில் திராவிடக் கட்சிகளை வீழ்த்தி இராஜ்ஜியத்தைப் பிடிக்க கட்சித் தலைமையின் ஆலோசனைப்படி இந்த யாகத்தை நடத்தினோம். திராவிட இயக்கத்தின் அடிவேராக இருக்கும் பெரியார் மண்ணிலேயே இந்த யாகத்தை நடத்தியுள்ளோம். விரைவில் தமிழ் நாட்டில் பி.ஜே.பி. ஆட்சியைப் பிடிக்கும்" என்று அடித்துச் சொன்னார்கள் - என்று 'ஜூவி' கட்டுரை கூறுகிறது.

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

*2) திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி "ஸ்ரீ மத் சடகோப இராமானுஜ ஜீயரின் அருள்வாக்கு" என்ற தலைப்பிலும், முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்கள் "ஸ்ரீ ஆண்டாள் திருஅவதாரமகிமை" எனும் தலைப்பிலும் பிரசங்கம் செய்வார்கள்.*

*3) காலம், கட்டணம், இடம் மாற்றம் இல்லை.*

*4) நிகழ்ச்சி நிரலை மாற்றியமைக்கவோ, இரத்து செய்யவோ நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு முழு அதிகாரம் உண்டு.*

*5) நிகழ்ச்சி இடையில் ஏதாவது காரணத்தால் நிறுத்தப்பட்டால் நுழைவுக் கட்டணம் திருப்பி அளிக்கப்படாது.*

***பின் குறிப்பு :*** *ஸ்ரீ வில்லிப்புத்தூர் ஆண்டாள் சன்னதிக்கு கவிஞர் வைரமுத்து சென்று மன்னிப்பு கேட்காத பட்சத்தில் 03.02.2018 அன்று ஸ்ரீமத் சடகோப ராமானுஜ ஜீயர், இரண்டாவது முறை இட்ட சபதத்தில் உறுதியாய் இருந்து, திருமதி. துர்க்கா ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தாலும் அதையும் மீறி, தொடங்கவுள்ள சாகும்வரை உண்ணாவிரதத் தொடக்க விழாவிற்கும், பா.ஜ.க. தேசிய செயலாளர் எச்.ராஜா ஒருவேளை தீக்குளித்தால் அந்நிகழ்விற்கும் செல்பவர்களைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் நிகழ்விற்கு வந்து ஆதரவு தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்."*

**கொளத்தூர் தா.செ.மணி, தலைவர், திராவிடர் விடுதலைக்கழகம்**

*- என்ற அறிக்கையை கழகத் தலைவர் விடுத்தார்.*

*கொளத்தூர் பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 03.02.2018 அன்று காலை 10.30 மணிக்கு கொளத்தூர் கே.பி.என். மகேஷ்வரன் தோட்டத்தில் "இந்து மதப் பெருமைகள் ஆய்வரங்கம்" ஒன்றிய கழகச் செயலாளர் காவை. ஈசுவரன் தலைமையில் தொடங்கியது. சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் கு.சூரியகுமார், செயலாளர் சி.கோவிந்தராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். சரவணபரத் வரவேற்புரையைத் தொடர்ந்து இந்த ஆய்வரங்கத்திற்கான தேவைகள் தற்போது உள்ள சூழ்நிலைகள் குறித்து தோழர்கள் சேலம் மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன், செயற்குழு உறுப்பினர் சக்திவேல், கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், தலைமை கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி, கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினர். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, முனைவர் க.நெடுஞ்செழியன் ஆகியோர் ஆய்வுரையாற்றினர். கொளத்தூர் நகர கழகச் செயலாளர் சி.இராமமூர்த்தி நன்றி கூற ஆய்வரங்கம் நிறைவுற்றது. பல்வேறு பகுதிகளிலிருந்து 300 க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் மதியம் மாட்டுக்கறி பிரியாணி உணவு வழங்கப்பட்டது.*

*"சோடா பாட்டில் புகழ்" ஜீயரின் அருள்வாக்கைக் கேட்கும் புனித யாத்திரையை 3.2.18 காலை பிரம்ம முகூர்த்தத்தில் திருப்பூர் மாவட்ட கழகத் தோழர்கள் தொடங்கினர்.*

*மோட்டார் வண்டியில் யாத்திரையின் நோக்கத்தைக் குறிக்கும் வகையில் பேனர் கட்டி, பெரியார் பிஞ்சுகள் நாமம், செந்தூரம் இட்டு கையில் ஜீயரின் வன்முறை பேச்சை குறிக்கும் வகையில் காவி நிற முக்கோண கொடியில் சோடா பாட்டில் ஜீயர் பெயரோடு அச்சிட்டு யாத்திரை கிளம்பினர். ஆண்டாளின் பக்தர்களாக கொளத்தூரில் முன்வரிசையில் அமர்ந்து வேத உபன்யாசங்களையும் ஆன்மீக சொற்பொழிவையும் கண்டு கேட்டு ஆண்டாளின் திருவருளை பெற்றனர். நிகழ்வில் மதியம் கோமாதா பிரியாணி 'போஜனம்' உண்டு மகிழ்வுடன் ஊர் திரும்பினர். நிகழ்ச்சிக்கு காவலாண்டியூர் கழக ஆதரவாளர் செட்டியூர் மகேஷ் ரூ.10,000 நன்கொடை வழங்கி 'புண்ணியம்' தேடிக் கொண்டார்.*

### பணி ஓய்வு பெற்ற தோழர் கழக ஏட்டுக்கு நன்கொடை

இராயப்பேட்டை கழகத் தோழர் கண்ணதாசன் மாமனாரும், மயிலை கச்சேரி சாலை அஞ்சலகத்தில் அஞ்சல் ஊழியராக **34** ஆண்டுகள் பணியாற்றி, பணி ஓய்வு பெற்றவருமான திருநாவுக்கரசு அவர்களை கழகத் தோழர்கள் இரா. உமாபதி, சு. பிரகாசு, செந்தில், அருண், விழுப்புரம் அய்யனார் ஆகியோர் நேரில் சென்று சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தனர். சமூகச் சிந்தனைக் கொண்ட திருநாவுக்கரசு, கழக ஏட்டுக்கு ரூ.**2000** நன்கொடை வழங்கினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 8th February 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN